## 11. சேர்க்கைக் கட்டண விவரம் :

**கல்லூரியில் சேர அனுமதிக்கும்போது மாணவர்கள் செலுத்த வேண்டிய கட்டணங்கள் :**

இளநிலை பட்ட வகுப்பு :

| | |
|---|---|
| B.A., B.B.A., B.Com., | Rs.3310/- |
| B.Sc., | Rs.3330/- |
| B.Sc., Comp.Sc. | Rs.2730/- |
| B.Com.,(CA) | Rs.2730/- கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டது. |

| கல்லூரி சிறப்புக் கட்டணம் ஆண்டிற்கு | | பல்கலைக்கழகக் கட்டணம் ஆண்டிற்கு | | இதரக் கட்டணம் ஆண்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| **ஆய்வகக் கட்டணம்** | | **தன்வைப்புக் கணக்கு 2** | | செஞ்சிலுவை | 20/- |
| பி.எஸ்சி. ஆய்வுக் கட்டணம் | 20/- | பல்கலைக்கழக விளையாட்டு (3 ஆண்டுகளுக்கு) | 300/- | என்.எஸ்.எஸ். | 10/- |
| சேர்க்கைக் கட்டணம் | 5/- | இளைஞர் மேம்பாடு (3 ஆண்டுகளுக்கு) | 90/- | கொடிநாள் | 5/- |
| மருத்துவ ஆய்வு | 5/- | குழுக் காப்பீட்டுத் தொகை | 25/- | பெற்றோர் ஆசிரியர் சங்கம் | 500/- |
| மதிப்பெண் சான்றிதழ் சரிபார்ப்புக் கட்டணம் | 50/- | **சேர்க்கையின் போது** | | மாணவரின் கல்லூரி அடையாள அட்டை | 50/- |
| **தன்வைப்புக் கணக்கு 1** | | மெட்ரிகுலேசன் | 100/- | கூட்டுறவுப் பண்டகசாலை | 750/- |
| உடற்கல்வி | 100/- | U.G. பதிவுக் கட்டணம் | 100/- | | |
| மாணவர் பேரவை | 25/- | அறிந்தேற்புக் கட்டணம் | 250/- | | |
| ஆண்டு மலர் | 20/- | வளர்ச்சிக் கட்டணம் | 40/- | | |
| நூலகம் | 10/- | பண்பாட்டுக் கட்டணம் | 50/- | | |
| நாள்காட்டி | 10/- | | | | |
| எழுது பொருள் | 50/- | | | | |
| நுண்கலை | 10/- | | | | |
| பட்டமளிப்பு விழா | 25/- | | | | |
| கணினி அறிவியல் மற்றும் வணிகக் கணினிப் பயன் பாட்டியல் மாணவர்களுக்கு எழுது பொருள் | 100/- | | | | |
| Audio & Visual | 10/- | | | | |

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்குக் கல்லூரிச் சிறப்புக் கட்டணம் கிடையாது.

## 12. மாணவர் விடுதிகள் :

அரசுக் கல்லூரி மாணவ, மாணவியருக்கென்று ஆதிதிராவிடர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை நடத்தும் விடுதிகள் உள்ளன. இவை தொடர்பான விவரங்களை விடுதிக் காப்பாளர்களிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

## 13. பொதுக்குறிப்புகள் :

கல்லூரியில் சேர்வதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உடனடியாகக் கல்லூரி அலுவலகத்தில் கட்டணங்களைச் செலுத்திவிடவேண்டும். இல்லையேல் சேர்க்கை மறுக்கப்படும். சேர்க்கை குறித்து விண்ணப்பதாரர்களுடன் எவ்விதக் கடிதத்தொடர்பும் மேற்கொள்ளப் படமாட்டாது. பட்ட வகுப்பு மாணவர்களிடம் கல்விக்கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது எனத் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. எனினும் சேர்க்கையின் போது மாணவர்கள் சிறப்புக் கட்டணங்களை செலுத்த வேண்டும். மேலும், கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிப்போர் பாரத ஸ்டேட் வங்கியில் சேமிப்புக்கணக்குத் தொடங்க வேண்டும்.

குறிப்பிட்ட பட்ட வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் எக்காரணம் கொண்டும் பாட மாற்றமோ, பயிற்றுமொழி மாற்றமோ செய்யப்படமாட்டாது.

இடம் : கரூர்.

முதல்வர்.
அரசு கலைக் கல்லூரி, கரூர்.

# அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி) கரூர் - 639 005.

**GOVERNMENT ARTS COLLEGE (AUTONOMOUS), KARUR - 639 005.**

(தேசியத் தர மதிப்பீட்டில் "A" தகுதி பெற்ற முதல்நிலைக் கல்லூரி)
(திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
(கல்லூரி இணையதள முகவரி : www.gackarur.ac.in)

# தகவலேடு (PROSPECTUS) - 2019-2020

## 1. விண்ணப்பப் படிவங்கள் :

1. விண்ணப்பப் படிவங்களைக் கல்லூரி அலுவலகத்தில் வேலை நாள்களில் நேரடியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். இளநிலை வகுப்புகளுக்குரிய விண்ணப்பத்தின் விலை ரூ.50/- (ரூபாய் ஐம்பது).
2. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு ஒரு விண்ணப்பம் மட்டும் இலவசமாக வழங்கப்படும். சாதிச் சான்றிதழ் நகலைச் சமர்ப்பித்து, இலவச விண்ணப்பம் பெற்றுக்கொள்ளலாம்.

## 2. இறுதி நாள் :

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கல்லூரி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள் : 06.05.2019 மாலை 5.00 மணி.

## 3. வயது வரம்பு : 01.07.2019 அன்று 21 வயதுக்கு மேல் இருக்கக்கூடாது.

## 4. கலந்தாய்வு விவரம் :

1. கலந்தாய்வில் பங்குகொள்ளும் மாணவ, மாணவியர் இத்தகவலேட்டினை அழைப்புக் கடிதமாகக் கொண்டு, கலந்தாய்வு நடைபெறும் நாள்களில் காலை 9.30 மணிக்கு மூலச் சான்றிதழ்கள், அவற்றின் இரு நகல்கள், கடவுச் சீட்டு அளவுள்ள 2 புகைப்படங்கள் மற்றும் உரிய கட்டணத்துடன் கட்டாயமாகப் **பெற்றோர் அல்லது பாதுகாவலருடன்** கலந்து கொள்ள வேண்டும்.

   கலந்தாய்வு நாள்கள் குறித்த தகவல்களைக் குறுஞ்செய்தி (SMS) மூலம் அனுப்புவதற்காக விண்ணப்பதாரர்கள் தங்களின் சரியான அலைபேசி எண்களை வழங்கவும். கூடுதல் விவரங்களைக் கல்லூரியின் இணையதள முகவரியில் தெரிந்துகொள்ளவும்.

2. கலந்தாய்வு நாள்கள் :

| | | |
|---|---|---|
| 15.05.2019 | - | சிறப்பு ஒதுக்கீடு (Special Quota) |
| 17.05.2019 | - | மொழிப்பாடத் துறைகள் (தமிழ், ஆங்கிலம்) |
| 20.05.2019 | - | அறிவியல் துறைகள் (பகுதி 3-இல் 275 முதல் 400 வரை மதிப்பெண் பெற்றவர்கள்) |
| 21.05.2019 | - | அறிவியல் துறைகள் (பகுதி 3-இல் 140 முதல் 274 வரை மதிப்பெண் பெற்றவர்கள்) |
| 24.05.2019 | - | வணிகவியல், வணிக கணினிப் பயன்பாட்டியல், வணிக நிர்வாகவியல், வரலாறு மற்றும் பொருளியல் துறைகள் |

## 5. பட்டப்படிப்பு விவரங்கள் :

**வழங்கப்படும் பாடப்பிரிவுகள் :**

| இளங்கலை | இளம் வணிகவியல் | இளம் வணிக நிர்வாகவியல் | இளம் அறிவியல் |
|---|---|---|---|
| தமிழ்<br>ஆங்கிலம்<br>வரலாறு (ஆ.வ.)<br>வரலாறு (த. வ.)<br>பொருளியல் (ஆ.வ.) | வணிகவியல்<br>Shift I (ஆ.வ.)<br>வணிகவியல்<br>Shift II (ஆ.வ.)<br>வணிகக் கணினிப்<br>பயன்பாட்டியல்<br>(B.Com.CA) (ஆ.வ.) | வணிக நிர்வாகவியல்<br>(B.B.A.,) (ஆ.வ.) | கணிதம் (ஆ.வ.)<br>கணிதம் (த. வ.)<br>இயற்பியல் (ஆ.வ.)<br>இயற்பியல் (த. வ.)<br>வேதியியல் (ஆ.வ.)<br>வேதியியல் (த. வ.)<br>கணினி அறிவியல் Shift I (ஆ.வ.)<br>கணினி அறிவியல் Shift II (ஆ.வ.)<br>தாவரவியல் (ஆ.வ.)<br>தாவரவியல் (த. வ.)<br>விலங்கியல் (ஆ.வ.)<br>விலங்கியல் (த. வ.)<br>புள்ளியியல் (ஆ.வ.)<br>புவியியல் (ஆ.வ.) |
| ஆ.வ. - ஆங்கில வழி.<br>த. வ. - தமிழ் வழி | | | புவியியல் (த. வ.)<br>புவி அமைப்பியல் (ஆ.வ.) |

## 6. விண்ணப்பிக்கும் முறை :

1. ஒற்றைச் சாளர முறையில் மாணவர் சேர்க்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஒருவர் ஒரு விண்ணப்பம் மட்டுமே பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும். பட்டப்படிப்பிற்கான விண்ணப்பத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து முதல்வருக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய நகல்கள் :
   1. பதிவிறக்கம் செய்யப்பட்ட மேல்நிலைப்பள்ளி மதிப்பெண் பட்டியல்
   2. சாதிச் சான்றிதழ் (நகல் ஒன்று)
   3. மாற்றுச் சான்றிதழ் (நகல் ஒன்று)
   4. ஆதார் அட்டை (நகல் ஒன்று)
   5. தன் முகவரியிட்ட அஞ்சல் அட்டை ஒன்று
2. சிறப்புச் சேர்க்கை மாணவர்களுக்கு :
   1. மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்
   2. முன்னாள் இராணுவத்தினருக்கான சான்றிதழ்
   3. விளையாட்டுத்திறன் (மாவட்ட மற்றும் அதற்கு மேலான) சான்றிதழ்
   4. அந்தமான் நிக்கோபார் தமிழ் மாணவர் சான்றிதழ்
   5. தேசிய மாணவர்படைச் சான்றிதழ்
3. பொது :

   பின் தங்கிய, பின் தங்கிய (முஸ்லீம்), மிகவும் பின்தங்கிய சீர் மரபினர், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின (BC, BC(M), MBC, DNC, SC, SC(A) and ST) விண்ணப்பதாரர்கள் ஒதுக்கப்பட்ட (Reserve) இடங்களுக்கு உரியவர் எனக் கருதப்பட வேண்டுமானால் விண்ணப்பத்தில் உரிய இடங்களில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். பள்ளி மாற்றுச் சான்றிதழில் உள்ள சாதியின் பெயரும் சாதிச் சான்றிதழில் உள்ள சாதியின் பெயரும் ஒன்றாக இருந்தால் மட்டுமே கல்லூரியில் இடஒதுக்கீட்டுக்கான சேர்க்கைக்கு உரியவராகக் கருதப்படுவர்.

## 7. விண்ணப்பதாரரைத் தேர்வு செய்யும் முறை :

அரசு ஆணையின்படி விண்ணப்பதாரர்கள் மேல்நிலைப் பள்ளித் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் அரசு அறிவித்துள்ள இட ஒதுக்கீடு அடிப்படையில் (Reservation) மட்டுமே பட்ட வகுப்புகளுக்குத் தேர்வு செய்யப்படுவர். ஒற்றைச் சாளர முறையில் கலந்தாய்வின் அடிப்படையில் நேரடிச் சேர்க்கை நடைபெறும். கலந்தாய்வில் கலந்துகொள்ளும் மாணவர்கள் மூலச்சான்றிதழ்கள், அவற்றின் இரண்டு நகல்கள் மற்றும் கடவுச்சீட்டு அளவுள்ள இரண்டு புகைப்படங்கள் கொண்டு வரவேண்டும். மதிப்பெண் பட்டியல் அரசுத் தேர்வுத்துறை இயக்குநரால் சரிபார்க்கப்படும். மதிப்பெண் பட்டியல் தவறு எனக் கண்டுபிடிக்கப்பட்டால் கல்லூரிச் சேர்க்கை இரத்து செய்யப்படுவதுடன் மாணவர்மீது குற்றவியல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## 8. கணினிக் கல்வித் திட்டம் :

கணினி அறிவியல் மற்றும் வணிகக் கணினிப் பயன்பாட்டியல் (B.Com.CA) வகுப்புகள் தவிர இதர வகுப்புகளில் சேரும் பட்ட வகுப்பு மாணவர்கள் அனைவரும் கணினிக் கல்வித் திட்டத்தில் சேர்க்கப்படுவர். அதற்கான கட்டணம் ரூ.700/- மட்டும் சேர்க்கையின்போது வசூலிக்கப்படும்.

## 9. கல்வி உதவித்தொகை :

தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியரின் குடும்ப வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குக் குறைவாகவும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியரின் குடும்ப வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்குக் குறைவாகவும் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியருக்கு வருமான வரம்பின்றியும் அனைவரும் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம். மேலும், அதற்கான வருமானச் சான்று வட்டாட்சியரிடமிருந்து பெற்று உடனடியாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளர் நலவாரியம் மூலம் வழங்கப்படும் உதவித்தொகைக்குத் தகுதியான மாணவ, மாணவியர் உரிய வழியில் விண்ணப்பிக்கலாம்.

## 10. இளநிலை / முதுநிலைப் பயில்திட்ட மாணாக்கர்களுக்கான கல்விக் காலம் :

பாரதிதாசன் பல்கலைக்கழகச் சேர்க்கை விதிகளின்படி 2018-19ஆம் கல்வி ஆண்டு முதல் பின்வரும் நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. The candidates who admitted on or after 2018-2019 onwards be allowed to complete the UG/PG Programmes within two years from the completion of programme.
2. In exceptional circumstance a further extention of one more year may be granted. The exceptional circumstances be spelt our clearly by the relevant statutory body concerned of the University..
3. During the extended period the student shall be considered as a private candidate and also not be eligible for ranking.